1978 மார்ச் 6]

திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே, பொது மக்களுடைய போக்குவரத்து அன்றாடம் அதிகமாகிக்கொண்டே இருக்கிறது. இந்த நிலையில் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் நகரப் பேருந்துகளை ஒவ்வொரு ஊருக்கும் அதிகப்படுத்தும் உத்தேசத்தில் இப்பொழுது ஏதேனும் திட்டமிடப் பட்டிருக்கிறதா? அப்படியிருந்தால் மதுரை மாவட்டத்தில் எந்தெந்த ஊர்களுக்குப் பஸ் விடுவதாக உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, நகரப் பேருந்துகளையும், மொபசல் பேருந்துகளையும் மிகைப் படுத்தத் திட்டம் உள்ளது. விரைவில் அதுபற்றிப் பரிசீலித்து அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, பி. ஆர். சி.யில் மாணவர்களுக்குப் பஸ் பாஸ் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா? அப்படியென்றால் என் காலதாமதம் ஏற்படுகிறது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, மதுரை மாநகரில் ஏற்கனவே சலுகைக் கட்டண வசதி இருந்து வருகிறது. மேற்கொண்டு பரிசீலனை எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து வினா எண். 418.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மூன்று கேள்விகளையும் ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி.

மாதவரம் பால்பண்ணை.

*வினா 418 திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் பால் பண்ணையில் லைசென்ஸ்தாரர் எத்தனை பேர் உள்ளார்கள்?

(ஆ) எவ்வளவு மாடுகள் உள்ளன?

(இ) என்ன விலைக்கு லைசென்ஸ்தாரரிடம் பால் வாங்கப்படுகிறது?

(ஈ) என்ன விலைக்கு விற்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மாதவரம் பால் பண்ணையில் தற்சமயம் 39 உரிமக்காரர்கள் உள்ளனர்.

(ஆ) இவர்களுடைய 461 மாடுகளும் 261 இளங்கன்றுகளும் தற்சமயம் உள்ளன.

(இ) கொழுப்புச்சத்து, கொழுப்புச்சத்து அல்லாத மற்ற திடப்பொருள் ஆகியவற்றின் அடிப்படையில் பாலின் விலை நிர்ணயிக்கப்பட்டு, பால்வள நிறுவனத்தாரால் உரிமக்காரர்களிடமிருந்து பால் வாங்கப்படுகிறது.

(ஈ) தரப்படுத்தப்பட்ட பால் சென்னை நகரில் பால் அட்டை வைத்திருப்போருக்கு லிட்டர் ஒன்றுக்கு ரூ. 2.00 வீதம் விநியோகம் செய்யப்படுகிறது. பாலிதின் பையில் அடைத்த பால் லிட்டருக்கு ரூ. 2.10 வீதம் விற்கப்படுகிறது.

சென்னை நகரில் பால் வழங்கல்.

* வினா 419 திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நடமாடும் வான் மூலமாக தானாக இயங்கும் விற்பனை முறையில் சென்னை நகரில் பால் விற்பனை செய்யும் திட்டம் சோதனை முறையில் நடத்திப்பார்க்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தினை செயல்படுத்துவது குறித்து முடிவெடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) இத்திட்டம் சோதனை முறையில் நடத்திப் பார்க்கப்படவில்லை.

தற்சமயம் தானியங்கி இயந்திரமில்லாத நான்கு நடமாடும் பால் விற்பனை ஊர்திகள் மூலம், சென்னை நகரத்தில் பாலும், பால்பண்ணை உற்பத்திப் பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

* Q. 420.—THIRU S. GANESAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Dairy Development Corporation has opened automatic milk supply booths in Madras ;

(*b*) the cost of its installations; and

(*c*) whether public opinion is against this?